# சமய சமூக மேல்நிலையாக்கம்: 2009 ஆம் ஆண்டுக்குப்பின்னரான கோயில்களின் ஆகமமயமாதல் குறித்த உசாவல்

**வ.மகேஸ்வரன்**

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
vallimahes@yahoo.com

**சுருக்கம்:** சமூக மேல்நிலையாக்கம் என்பது பல்வேறு காரணிகளால் ஏற்படுவதாகும். எனினும் சமய சந்தர்ப்பங்கள் அவற்றுள் ஒரு காரணியை மட்டும் முதன்மைப்படுத்துவதாக அமைந்தும் விடுகின்றன. புராதன இனக்குழும அமைப்புகள் தம்மை மேல்நிலைப்படுத்துவதற்குப் பல்வேறு காரணிகளைத் துணைகொண்டதைப் பண்பாட்டு மானிடவியலூடாக அறியலாம். சமகாலத்திலும் சமமின்மையான சமூக அடுக்கமைவு காணப்படுகின்றது. சாதியம், கல்வி, பொருளாதாரம் என்பன இந்தச் சமமின்மையைத் தீர்மானிக்கின்றன. இந்தக்கட்டமைவுள் இருந்து வடபுலத்துச் சமூக அமைப்பொன்று மேல்நிலையாக்கம் பெற்றதான ஆய்வாக இக்கட்டுரை முன்மொழிவு அமைகிறது. இவ்வாய்வின் நோக்கங்களாக (i) சமூக மேல்நிலையாக்கம் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் ஒரு சமூகத்தின் வளர்ச்சியை, விருத்தியை இனங்காண்பதும் (ii) சமூக மேல்நிலையாக்கத்திற்கு சமயம், வழிபாட்டு நிறுவனம் என்பன எவ்வகையில் அடையாளங்களாக உள்ளன என்பதை வெளிக்கொணருவதுமாகும். யாழ்ப்பாணத்துச் சாதிய அடுக்கமைவில் பல குழுமங்கள் புறந்தள்ளி வைக்கப்பட்டபோது அக்குழுமங்கள் இது தான் நமக்கு விதிக்கப்பட்ட விதி என்ற அடங்கிப்போதல் முறையில் நீண்டகாலம் உறைநிலையில் அடங்கிக் கிடந்து சமூக அசைவியக்கத்தின் பிரதான துணைப் பங்காளிகளாக விளங்கினர். எனினும் நவீனத்துவம், இடதுசாரிச் சிந்தனைத் தளங்களின் விரிவாக்கம் ஏற்பட்டபோது அவர்கள் தமக்கான உரிமைகளைப் பெற முயன்றனர். அது உரிமைப் போராட்டமாக மாறியது. மேல்நிலையாக்கம் குறித்த செயற்பாடாக அது அமையவில்லை. விடுதலை இயக்கங்களின் சாதிமறுப்பு நடவடிக்கைகள் நீண்டகாலம் நிலவிவந்த அமைப்பு ரீதியான விடயங்களை இல்லாதொழிக்க முயன்றதாகவும் வலிந்து திணித்ததாகவும் அமைந்தன. எனினும் மறுதலையாகவும் அமைதியாகவும் அவ்வாறான மக்கள் தமக்கான பொருளாதாரவளம், அதனுடான கல்வி ஆகியவற்றின் துணைகொண்டு தங்கி வாழும் நிலையில் நின்றும் விடுபட முனைந்து தமது நிலையை உயர்த்தினர் இவ்வாறான மேலெழுச்சி/மேலாக்கம் என்பதை ஏனைய சமூகங்களுக்கு வெளிப்படுத்தவும், ஏனைய சமூக நடவடிக்கைகளுக்குச் சமமாகத் தமது நடவடிக்கைகளை இனங்காட்டவும் உரிய களமாகத் தமது சிறுதெய்வக் கோயில்களைப் பயன்படுத்தினர். வேள்வி, உயிர்ப்பலி என்ற சடங்குகளுடன் சிறுதெய்வப் பாரம்பரியத்துடன் நிலவி வந்த கோயில்கள் மறுசீராக்கம் பெற்றன. ஆகம முறையிலமைந்த கோயில்களுக்குச் சமானமான வளர்ச்சியை அவை காட்ட முனைந்தன. கோயில் கட்டமைவு மாத்திரமன்று அது சார்ந்த மக்களது சமூகப் பழக்கவழக்கங்களிலும் வாழ்வு முறைகளிலும் இம்மாற்றம் இடம்பெறலாயிற்று. ஆச்சமூகங்கள் தமக்கான அங்கீகாரத்தை கோயிலை முன்நிறுத்தி பெற்றுக்கொள்ள முயன்ற சூழலை நாம் இதனூடாக அறியலாம். இது விடய ஆய்வு என்ற அடிப்படையில் அமைந்துள்ளதால் கோண்டாவில் கிராமத்தில் "பேச்சியம்மன்" என்ற சிறு தெய்வக்கோயில் அருள்மிகு மனோன்மணி தேவஸ்தானமாக மாறிய வரலாற்றை முன்நிறுத்தி ஆராயப்படுகின்றது. சமூகமேல்நிலையாக்கம் என்பது வலிந்து புகுத்த முடியாத ஒரு செயற்பாடு. அதனைக் காலமும், காரணிகளும் நிர்ணயிக்கும். அவை ஒன்றுக்கொன்று பொருந்தி வருகின்ற போது மாற்றம் என்பது அமைதியாக நடந்தேறிவிடும்.